அன்னைத் தமிழே! சூளுரைக்கிறேன்!

தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்...

2ஆம் பக்கத் தொடர்ச்சி

அரசில் ஆங்கிலமும் இணை ஆட்சி மொழியாக - அலுவல் மொழியாக நீடிக்கும் என்ற நிலை ஏற்பட்டது. **இந்திய மொழிகளை ஒவ்வொரு முறையும் காத்து நிற்பது தமிழ்நாடும், தமிழர்களின் மொழியுணர்வும்தான்.**

அந்த உணர்வை அரசியல் கணக்காக அணுகாமல், எதிர்காலத் தலைமுறையினரைப் பாதுகாக்கும் கவசமாக்கிடும் வகையில், 1967ல் பேரறிஞர் அண்ணா தலைமையில் அமைந்த தி.மு.க. அரசு, இருமொழிக் கொள்கையை நிறைவேற்றிட முன்வந்தது. 1968 ஜனவரி 23ஆம் நாள் தமிழ்நாடு சட்டப்பேரவையின் சிறப்புக்கூட்டத்தை முதலமைச்சர் அண்ணா கூட்டினார். “தமிழ்நாட்டில் அனைத்துப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு, தமிழ்-ஆங்கிலம் ஆகிய இருமொழிகளுக்கு இடமளித்து, இந்தியை அறவே நீக்கிவிட இப்பேரவை தீர்மானிக்கிறது” என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க இருமொழிக் கொள்கை தீர்மானத்தை நிறைவேற்றினார்.

இந்திய ஒன்றியத்தில் ஒரு மாநிலத்திற்குரிய சட்டவழியிலான உரிமையை மிகச் சரியாகக் கையாண்டு இருமொழிக் கொள்கையைச் சட்டமாக்கிய பேரறிஞர் அண்ணா, “என்னால் ஆனதை நான் செய்துவிட்டேன். இனி டெல்லி தன்னால் ஆனதை செய்து கொள்ளட்டும்” என்று அறைகூவல் விடுத்தார். ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்படியாவது தமிழை அழித்து, இந்தி-சமஸ்கிருதத்

> **இந்திய மொழிகளை ஒவ்வொரு முறையும் காத்து நிற்பது தமிழ்நாடும், தமிழர்களின் மொழியுணர்வும்தான்.**

தைத் திணிக்கலாம் என முயற்சிக்கிறது. அண்ணாவின் இருமொழிக் கொள்கை ஆயுதமாகவும் கேடயமாகவும் தமிழைக் காத்து நிற்கிறது.

பேரறிஞர் அண்ணா நம்மை விட்டு மறைந்தபிறகு, இயக்கத்தையும் ஆட்சியையும் தலைமையேற்று வழிநடத்திய நம் உயிர் நிகர்த் தலைவர் கலைஞர் அவர்கள் 1970-ஆம் ஆண்டு பிப்ரவரி 22-ஆம் நாள் தீரர் கோட்டமாம் திருச்சியில் நடந்த மாவட்ட மாநாட்டில் தி.மு.கழகத்தின் கொள்கை வழிப் பயணத்திற்கான ஐம்பெரும் முழக்கங்களை உடன்பிறப்புகளுக்கு வழங்கினார்.

- **அண்ணா வழியில் அயராது உழைப்போம்!**
- **ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்!**
- **இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!**
- **வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்!**
- **மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி!**

-இவை தான் அந்த முழக்கங்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் வழங்கிய ஐம்பெரும் முழக்கங்கள் ஒவ்வொன்றும் உடன்பிறப்புகளின் உள்ளத்திலிருந்து எழும் உணர்வாக உரக்க ஒலிக்கிறது. அதுதான் அரை நூற்றாண்டுக்கும் மேலாக அரசியல் களத்தில் எதிரொலிக்கிறது. இனம்-மொழி காக்கவும், மாநில உரிமைகளை மீட்கவும் அண்ணா வழியில் அயராது உழைத்த நம் உயிர்நிகர்த் தலைவர் கலைஞரின் வழியில் உங்களில் ஒருவனான என் தலைமையிலான கழகம், போராட்டக் குணம் மிகுந்த இயக்கமாகச் செயல்பட்டு, இந்திய ஒன்றியத்தின் திசை வழியைத் தீர்மானிக்கிறது.

எப்போதெல்லாம் இந்தி மொழி ஆதிக்கம் செலுத்தும் எண்ணத்துடன் எல்லைப்புறமாகவோ, கொல்லைப்புறம் வழியாகவோ நுழைய முயல்கிறதோ, அப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் விழிப்புணர்வுடன் இருந்து தமிழ்நாட்டைப் பாதுகாத்து வருகிறது.

1971ஆம் ஆண்டு செப்டம்பர் 25, 26 தேதிகளில் கோவையில் தி.மு.கழக மாணவர் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டுக்கு மொழிப் போர்க்கள வீரர் எல்.கணேசன் தலைமை தாங்கினார். அவரை அண்ணன் வைகோ (அப்போது நெல்லை கோபால்சாமி) அவர்கள் முன்மொழிந்தார்.

கழகத்தின் இன்றைய பொதுச் செயலாளர் என் அன்பிற்குரிய அண்ணன் துரைமுருகன் அவர்களும், மொழிப் போர்க்களத்தில் மாணவர்களாகக் களம் கண்ட திரு.காளிமுத்து, திரு.இரகுமான்கான், திரு.இராசாமுகமது, திரு.என்.வி.என்.செல்வம், திரு.வலம்புரி ஜான் உள்ளிட்டோர் பல்வேறு தலைப்புகளில் கலந்துகொண்டனர். அப்போது கல்லூரி மாணவனான நானும் அந்த மாநாட்டுப் பணிகளில் பங்காற்றினேன்.

> **பேரறிஞர் அண்ணாவின் இருமொழிக் கொள்கை ஆயுதமாகவும் கேடயமாகவும் தமிழைக் காத்து நிற்கிறது.**

அழைப்பிதழின் உரையாற்றுவோர் பட்டியலில் என் பெயர் இல்லாவிட்டாலும், மாநாட்டின் எழுச்சியால் உந்தப்பட்டு, “எனக்குப் பேச வாய்ப்பு கொடுங்கள். இரண்டு நிமிடம் பேசுகிறேன்” என்று மாநாட்டுத் தலைவர் எல்.கணேசனிடம் கேட்டேன். அவரும் அனுமதி தந்தார். கழகத் தலைவர் இருந்த மேடையில் என் பேச்சைத் தொடங்கினேன்.

“மாணவர்களே.. இன்றைக்கு இந்தி திணிக்கப்படுகின்ற முயற்சி தலைகாட்டிக் கொண்டிருக்கிறது. நம்முடைய மாணவர் பட்டாளம் அதனை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். எந்தப் போராட்டமாக இருந்தாலும், எப்படிப்பட்ட தியாகமாக இருந்தாலும் நம்முடைய மாணவர் பட்டாளம் அதிலே கலந்துகொள்ள வேண்டும் என்று மாநாட்டுத் தலைவர் அவர்கள் அழைப்பு விடுத்தார். அப்படிப்பட்ட மாணவர் பட்டாளத்தில் என்னையும் இணைத்துக் கொள்கிற வாய்ப்பை நீங்கள் உருவாக்கித் தரவேண்டும். அது எந்தத் தியாகத்தின் பட்டியலாக இருந்தாலும் அதிலே என்னையும் சேர்த்துக்கொள்வதற்கு ஆணையிட வேண்டும்.

மொழிக்காக, நம்முடைய இனத்திற்காகப் போராடுகிறோம். போராடுகிற இந்த நேரத்தில், நம்முடைய உயிரை

> **ஆதிக்க மொழித் திணிப்பைத் தடுத்து, அன்னைத் தமிழைக் காப்பேன் என இந்தப் பிறந்தநாளில் சூளுரைக்கிறேன்.**

இழக்கின்ற தியாகத்தைச் செய்வதற்குக்கூட காத்திருக்கிறோம். என்னுடைய தந்தைக்கு நான்கு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். எனவே அந்த நான்கு ஆண் பிள்ளைகளில் ஒரு ஆண் பிள்ளை போய்விடுவதால் என்னுடைய தந்தை நிச்சயம் கவலைப்பட மாட்டார். அதுவும் மொழிக்காக, ஒரு இனத்திற்காக, தனயனை இழந்த தந்தை என்று என்னுடைய தந்தைக்கு பாராட்டு கிடைக்கும்.

அத்தகைய பாராட்டை, பெருமையை வாங்கித் தந்த மகிழ்ச்சியும் என்னைச் சேருமல்லவா? எனவேதான் நான் சொல்கிறேன். எத்தகைய தியாகத்தைச் செய்வதற்கும் தயார்.. தயார்..” - என்று நான் முழங்கினேன்.

தந்தை பெரியார் மூட்டிய தீயை பேரறிஞர் அண்ணா திக்கெட்டும் பரவச் செய்தார். தண்டவாளத்தில் தலை வைத்து தமிழைக் காத்தார் நம் உயிர் நிகர்த் தலைவர் கலைஞர். அவர்களின் வழியில்தான் நம் கழகம் என்றும் பயணிக்கும்.

உங்களில் ஒருவனான எனக்கு உடன்பிறப்புகள் பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்து, மகிழ்ச்சியைப் பகிர்ந்து, என்னையும் மகிழ வைத்திருக்கிறீர்கள். உங்கள் அன்பான வாழ்த்துகள் என்னை மேலும் உறுதியுடன் உழைப்பதற்கும் இனம்-மொழி காக்கும் போராட்டத்தை முன்னெடு ப்பதற்கும் ஊக்கமாக அமைந்துள்ளது.

“ஆதிக்க மொழித் திணிப்பைத் தடுத்து, அன்னைத் தமிழைக் காப்பேன்!” என இந்தப் பிறந்தநாளில் சூளுரைக்கிறேன்.

அன்புடன்
மு.க. ஸ்டாலின்

திருவள்ளுவர் ஆண்டு 2056
மாசி 16
28.02.2025.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு- முன்னிலை! டி.லோகேஷ் தலைமையில்

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா! மாபெரும் ரத்ததான முகாம்!

மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ. தொடங்கி வைக்கிறார்!

சென்னை, மார்ச் 1

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. கழக தலைவர் 72-வது பிறந்தநாள் - மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மாபெரும் இரத்தான முகாம் கழக மருத்துவரணிச் செயலாளர் மருத்துவர். நா.எழிலன், எம்.எல்.ஏ. தொடங்கி வைக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 10, கொடுக்கும் குருதி உயிர்காக்கும்! கொள்கை உறுதி நிலம் காக்கும் எனும் தலைப்பில் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், மாபெரும் இரத்ததான முகாம் நாளை (02.03.2025 ஞாயிறு) காலை 08.00 மணியளவில், சென்னை, அகரம், நால்வர் மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்த இரத்தான முகாமில், சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ். தனசேகர் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எ.நாகராசன் எம்.சி, ஐ.சி.எப்.வ.முரளிதரன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சரிதா மகேஷ்குமார் எம்.சி, தேவஜவகர், எஸ்.பன்னீர்செல்வம், டி.லோகேஷ், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக் ம.அசோக்குமார் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர் நானா, இரா.தயாளன், எம்.சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி, என்.ராமச்சந்திரன், எம்.டி.தமிழ்செல்வன், செ.முருகன், என்.சௌந்தர்ராஜன், என்.பவுல்ராஜ், யோகபிரியா தனசேகர் எம்.சி, கே.சாரதா எம்.சி, எம்.தாவூத் பீ எம்.சி, பி.அமுதா பொன்னிவளவன் எம்.சி, சி.ஸ்ரீதணி எம்.சி. கொளத்தூர் மேற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்: என்.திலிப்குமார், ஆ.தியாகராஜன், எஸ்.பிரபு சூரி, ஆர்.இளங்கோ, என்.இளங்கோ, ஆர்.சசிகுமார். கொளத்தூர் கிழக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்: கே.பிரசாத், எ.வினோத், ச.ராஜேஷ், எல்.எஸ்.உதயகுமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் இரத்தான முகாமில் சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மாபெரும் இரத்தான முகாமை கழக மருத்துவரணிச் செயலாளர் மருத்துவர். நா.எழிலன், எம்.எல்.ஏ, அவர்கள் தொடங்கி வைக்கிறார்.

மேலும் இரத்ததான முகாமில் மேயர் பிரியா ராஜன், டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி., இரா.கிரிராஜன் எம்.பி., ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.எ., ப.ரங்கநாதன், இரா.விடுதலை, மாநில நிர்வாகிகள்: கே.எஸ்.இரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, தமிழன்பிரசன்னா, சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, கவிஞர் நன்மாறன், எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, பரிதிஇளம்சுருதி, ஆர்.வரதன், வே.உமாகாந்த், மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், ஜி.மகாதேவன், புனிதவதிஎத்திராசன், எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, மண்டலகுழு நிலைக்குழு தலைவர்கள்: கூ.பி.ஜெயின் எம்.சி, பா.ஸ்ரீராமுலு எம்.சி, சொவேலு எம்.சி, டாக்டர். ஜி.சாந்தகுமார் எம்.சி. பகுதி கழக செயலாளர்கள்: வே.வாசு, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், வி.சுதாகர், பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி.செம்மொழி எம்.சி, பி.ஜெ.துளசிங்கம், வி.ரமேஷ்(எ) நீலகண்டன் எம்.சி, பி.உதயசங்கர், சாவித்திரிவீரராகவன், டாக்டர். ஏ.பி.பூர்ணிமா எம்.சி, எம். இப்ராஹிம்கனி, அ.நிர்மலா தேவி, இரா.கலைச்செல்வி. மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: வானவில் விஜய் நா.துலுக்காணம் ஜி.தாமோதரன் எல்.பி.எப். மோகன் சுதாதீனதயாளன் எம்.சி., ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி., ஜி.வி.நாகவள்ளி எம்.சி., பி.விஜயகுமார் எம்.விநாயகம் க.பா.பிரதீப்குமார் எல்.சம்பத்குமார் கா.ராஜ்முகமது கு.கிருஷ்ணாமூர்த்தி து.ஆயிரம் இரா.வீரமணி கொளத்தூர் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் பி.பழனி இளா. இளங்கோவன் எஸ். கே.ரமேஷ் எல்.டி.தாமஸ், கொளத்தூர் கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் கே.ஜார்ஜ்குமார் பி.பொன்முடி பி.டி.சி.ரவி பி.ஊமைதுரை ப.அன்பரசு டி.சந்திரசேகர் கே.பி.ஆதவன்மணி ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

இந்த இரத்ததான முகாமில் பி.அதிபதி, எம்.ஜெ.சி. பாபு ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் தலைமையில் முதல்வர் பிறந்தநாள்!

140வது வட்டத்தில் 8,073 பேருக்கு நலஉதவிகள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டம்!

அமைச்சர்கள் எ.வ.வேலு - மா.சுப்பிரமணியன் - அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கி சிறப்புரை!

சென்னை, மார்ச் 1

சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி - 140வது வட்ட தி.மு.க. சார்பில் கழக தலைவர் தமிழக நிரந்தர முதல்வர் அவர்களின் மார்ச் 1 அன்று, 72வது பிறந்தநாளை முன்னிட்டு பொதுக்குழு உறுப்பினரும் 140வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் தலைமையிலும், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், 10வது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், 13வது மண்டலகுழு தலைவருமான இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், ஆகியோர் முன்னிலையிலும், பகுதி கழக நிர்வாகிகள் த.சம்பத், கவிதா கௌதமன், வட்ட செயலாளர் ந.தமிழரசு, மற்றும் கு.புகழ்வேந்தன், வழக்கறிஞர் த.பாபு, வழக்கறிஞர் எம்.சுரேஷ்குமார், ஜி.பாபு, ஆர்.ரவி, லால்மனோகரன், எஸ்.மணிவண்ணன், எம்.வளர்மதி, அ.வீரமணி, ஆ.கவிராஜ், ஆர்.பன்னீர், இ.பாண்டுரங்கன், கே.ஞானம் ஆகியோர் வரவேற்பில் மக்கள் முதல்வர் மனித நேய திருநாளை முன்னிட்டு இன்று (01.03.2025 சனிக்கிழமை) மாலை 6 மணியளவில், சைதாப்பேட்டை, குமரன்காலனி, அரங்கநாதன் சுரங்கப்பாதை அருகில், 8073 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தின் முன்னதாக மாலை 5 மணியளவில் இறையன்பன் குத்தூஸ் அவர்களின் கழக இன்னிசை நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இககூட்டத்திற்கு திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு, சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம்கவி, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா ஆகியோர் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்ற உள்ளனர்.

மேலும் இக்கூட்டத்திற்கு கவிஞர் காசிமுத்துமாணிக்கம், வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி., க.தனசேகரன் எம்.சி., பாலவாக்கம் க.சோமு, எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி., பாலவாக்கம் மு.மனோகரன், எம்.எஸ்.ஹரிபாபு, வாசுகிபாண்டியன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி., பகுதி கழக - ஒன்றிய கழக செயலாளர்கள்

கே.கண்ணன் எம்.சி., மு.இராசா எம்.சி., எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி., வி.இ.மதியழகன் எம்.சி., சு.சேகர், துரைகபிலன், நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., அ.ம.துரைவீரமணி, ஜி.வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் மேடவாக்கம் ப.ரவி, எம்.கே.ஏழுமலை, உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன், அ.அரிகிருஷ்ணன், ஆர்.பாலசுந்தரம், அடையார் பி.ஜே.பாஸ்கர், ராமாபுரம் வ.செல்வகுமார், த.பஷிர், வீர.கனிமொழி, பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், ஆர்.ரமேஷ், வி.பி.ஜானகிராமன், இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆராக்கியம், மு.பாக்கியலட்சுமி, ஆர்.அருணகிரி, மாமன்ற உறுப்பினர்கள் வேளச்சேரி வே.ஆனந்தம், தா.மோகன்குமார், ரத்னாலோகேஷ்வரன், இளைஞர் அணி நிர்வாகிகள் ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் எஸ்.பிரகாஷ், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், வட்ட கழக செயலாளர்கள் கை.மு.சேகர், அட்கோகமலநாதன், எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, நா.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, எஸ்.ஆர்.செந்தில், ஆ.வரதன், மாவட்ட பிரதிநிதிகள் டி.என்.சிவமணி, ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பொன்.ஜெய்சிங், பால்கார்ரவி, பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் ஜி.ஜே.மோசஸ், எஸ்.விவேக் செல்வம், 140வது “அ” வட்ட கழக நிர்வாகிகள் வி.மனோகரன், ஆர்.ஜெகநாதன், தென்றல் தினேஷ், கு.கௌரி, எஸ்.பஷீர், எல்பிஎப்.துளசி, ஆ.கமல்சங்கர், எஸ்.சரவணன், பிரஸ் விஜி, உள்ளிட்ட மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், 140, 140அ, வட்டத்திற்குட்பட்ட பகுதி துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், தகவல் தொழில்நுட்ப அணியின் வட்ட ஒருங்கிணைப்பாளர்கள், கழக முன்னோடிகள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள், பாக களப் பணியாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் உள்ளிட்ட கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

இக்கூட்டத்தின் நிறைவாக வட்ட அவைத்தலைவர், பிரஸ் க.மணி நன்றி கூற உள்ளார்.